இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 28-06-2025

# தீர்மானம் போடத் தகுதி இருக்கிறதா?

1975ஆம் ஆண்டு அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டதை வைத்து கீழ்த்தரமான அரசியலைச் செய்கிறது பா.ஜ.க. அவசர நிலையின் போது உயிரிழந்தவர்களுக்கு இன்றைய ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியை விமர்சிப்பதற்கு பா.ஜ.க.வுக்கு இருக்கும் ஒரே ஆயுதம் இதுதான். இப்படித் தீர்மானம் போடுவதற்கான தகுதி, பா.ஜ.க.வுக்கு இருக்கிறதா?

“நாட்டில் கடந்த 1975 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட அவசர நிலையின் அடக்குமுறைகளால் உயிர்த்தியாகம் செய்தவர்களை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூர்ந்து மரியாதை செலுத்த” பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவசர நிலையின் போது அரசமைப்புச் சட்டம் அளிக்கும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு கற்பனை செய்ய முடியாத அடக்குமுறைகளுக்கு ஆளானவர்களுக்காக ஒன்றிய அமைச்சரவை இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தி இருக்கிறது.

கடந்த இரண்டு நாட்களாக பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பா.ஜ.க. அமைச்சர்களும் ஜனநாயகக் காவலர்களாக, மக்களாட்சியின் காவலர்களாக, அரசியலமைப்புச் சட்டத்தின் காவலர்களாக மாறிக் காட்சி அளிக்கிறார்கள். இந்த வேஷம் அவர்களுக்கு ஒட்டவில்லை, பொருந்தவில்லை என்பதுதான் உண்மை.

இந்திய ஜனநாயக வரலாற்றில் இருண்ட காலம் என்றும், அரசமைப்பு மாண்புகள் கைவிடப்பட்டன என்றும், அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன என்றும், பத்திரிக்கைச் சுதந்திரம் முடக்கப்பட்டது என்றும், பலரும் கைது செய்யப்பட்டார்கள் என்றும், நாடாளுமன்றத்தின் குரல் முடக்கப்பட்டது என்றும், நீதிமன்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டன என்றும், ஏழை எளிய மக்கள் குறிவைக்கப்பட்டார்கள் என்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் மிக உருக்கமான பதிவை இட்டுள்ளார். இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்?

**மோடி பிரதமர் ஆனது முதல் இந்திய அரசியலமைப்புச் சட்டம்தான் அதிகமான தாக்குதலுக்கு உள்ளானது. இன்றைய கூட்டாட்சி இந்தியாவை ஒற்றைச் சர்வாதிகார நாடாக மாற்றுவதற்கு ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்டத்தை மோடி கொண்டு வருகிறார். அவர்கள் நினைத்ததைப் போன்ற தனித்த பெரும்பான்மை உள்ள வெற்றியை பா.ஜ.க. பெற்றிருந்தால் இந்நேரம் அவர்களது ஆட்டத்தை இந்தியா பார்த்திருக்கும். நிதிஷ்குமார் தயவில், சந்திரபாபு தயவில் ஆட்சி நடத்துவதால் தான் அடக்கி வாசிக்கிறது பா.ஜ.க.. ‘நாங்கள் 400 இடங்களை அடைய நினைப்பது இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்காகத்தான்’ என்று பா.ஜ.க. எம்.பி.ஒருவர் தேர்தல் நேரத்தில் சொன்னார்.**

**இந்திய நாடாளுமன்றத்தில் ஏதாவது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினை குறித்து பா.ஜ.க. விவாதம் நடத்தி இருக்கிறதா? சாதாரண விவாதத்தின் போதாவது பிரதமர் கலந்து கொண்டு பதில் சொல்லி இருக்கிறாரா? தான் உரையாற்றும் நாளை தவிர வேறு நாளில் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து அமர்ந்து பதில் அளித்துள்ளாரா பிரதமர்? இந்தியாவின் எந்தப் பிரச்சினைக்காவது அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பிரதமர் நேரடியாக கருத்துக் கேட்டுள்ளாரா? நாடாளுமன்றத்துக்கோ ஜனநாயக அமைப்புகளுக்கோ அவர் என்றாவது மரியாதை தந்துள்ளாரா?**

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் ஆகும். மாநிலங்கள் அனைத்தும் நிதி நெருக்கடியில் இருக்கின்றன. அவற்றின் நிதி உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு விட்டன. ஒன்றியப் பட்டியல் - மாநிலப்பட்டியல் - பொதுப்பட்டியல் என அரசியலமைப்புச் சட்ட அதிகாரங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொதுப்பட்டியலை அபகரித்து விட்டார்கள். மாநிலப் பட்டியலை ஆக்கிரமித்து விட்டார்கள். இவர்கள் அரசியலமைப்புச் சட்ட மாண்பைப் பற்றி பேசலாமா?

மாநிலங்கள் மீது படையெடுப்பு, மாநில மொழிகள் அழிப்பு, தேசிய இனங்களின் அடையாளங்கள் அழிப்பு - இவைதான் இன்றைய பா.ஜ.க. அரசின் கொள்கை ஆகும். காஷ்மீர் என்ற மாநிலம் சிதைதக்கப்பட்டு சின்னாபின்னம் ஆனது. சட்ட ரீதியாகவே செய்தார்கள். மணிப்பூர் பற்றி எரிகிறது. எரிய விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மை மக்கள் பீதியில் வாழ்கிறார்கள். கலவரம் செய்ய ஒரு காரணம் கிடைத்தால் போதும். வெறுப்புப் பேச்சுகளின் புகலிடமாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் இருக்கின்றன. உச்சநீதிமன்றமே பல முறை இதனைக் கண்டித்திருக்கிறது.

உச்சநீதிமன்றம், பா.ஜ.க. ஆட்சியாளர்களால் என்னவாக மதிக்கப்படுகிறது என்பதை விளக்கத் தேவையில்லை. தேர்தல் ஆணையர் தேர்வில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியைப் புறக்கணித்தது இந்தியாவின் நீதித்துறை மீதான மாபெரும் அச்சுறுத்தல் அல்லவா?

**வாக்குறுதிகள் எவற்றையும் எதையும் நிறைவேற்றாமல், அப்பாவி மக்கள் மீது அனைத்துச் சுமைகளையும் வைத்துள்ளது மோடி அரசு. பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன்கள் ஒரே நாளில் ரத்து செய்யப்படுகின்றன. கடன் வாங்கியவர்கள் தப்ப வைக்கப்படுகிறார்கள். இது யாருக்கான ஆட்சி என்பதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை.**

இப்படி ஒரு பாசிச ஆட்சியை நடத்தி வரும் பா.ஜ.க., மிசா காலத்துக்காக கண்ணீர் விடுவது கேவலமானது. ‘மிசாவில் கைதான தி.மு.க., காங்கிரசோடு கூட்டணி அமைக்கலாமா?’ என்ற கேள்வியை இவர்கள் எழுப்புகிறார்கள். 23.1.1978 அன்று வடமாநிலத்தில் உரையாற்றிய பிரதமர் இந்திரா அவர்கள், மிசா சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக மன்னிப்புக் கேட்டார். ரேபரேலி தொகுதி பொதுக்கூட்டத்திலும் மன்னிப்பு கேட்டார். 1979 செப்டம்பர் 30 அன்று சென்னையில் உரையாற்றிய பிரதமர் இந்திரா அவர்கள், ‘நாங்கள் செய்த தவறுகளுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்’ என்றார். இவை எல்லாம் வரலாறு.

பதினோரு ஆண்டுகளாக அறிவிக்கப்படாத அவசர நிலையை நடத்தி வரும் பா.ஜ.க. தலைமை எத்தனை தடவைகள் மன்னிப்புக் கேட்கப் போகிறது?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.6.2025) முகாம் அலுவலகத்தில், கழகத்தின் வில்லிவாக்கம் கிழக்கு பகுதியின் 98‘அ’ வட்ட செயலாளர் சி.தேவராஜ் அவர்களின் மகள் மீனா – அபிஷேக் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.6.2025) தனது புகைப்படக் கலைஞர் இரா.குட்டி (எ) ஞானசாஸ்தா – ஆ.சுஜி இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் நாடளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், எ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் நா.இளையராஜா மற்றும் மணமக்களின் உறவினர்கள் உடனிருந்தனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் தலைமையில்

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில் செம்மொழி நாள்! மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை - உபகரணங்கள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – நடிகர் நாசர் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 28-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு “செம்மொழி 27” கல்வியில் சிறந்த தமிழ்நாடு! கலைஞர் புகழைக் கொண்டாடு!! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் இன்று (28.06.25 சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர் பி.எஸ்.பி. கன்வென்ஷன் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இக் கல்வி உதவி வழங்கும் விழாவில் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர். பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பி.கே.மூர்த்தி, எம்.சி., டி. எஸ்.பி. ராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமார் எம்.சி, வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, ஜெ.பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம். அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்:

அ.செல்வம், க.முரளி பாபு, க.கதிஜா, மா.ரமேஷ், து.ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ.ராமு, அம்பத்தூர் வடக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவீந்திரன், பு.வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு.இரகு, மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதாசெல்லதுரை, கு.சங்கர். அம்பத்தூர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சி.சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், இரா. டீக்கா, மாமன்ற உறுப்பினர்கள்: எஸ்.உமா எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொ.சேதுராமன் (எ) பொன்சேட்டு, ஏ.கே. டி.பாஸ்கர், பா.மாறன், டி.சுரேஷ்பாபு, ஆர்.ஜெயராமன், சோ.மதியழகன், எஸ்.கே.சதீஷ்குமார், எஸ். எஸ்.சவரிமுத்து, எஸ்.எம். முருகானந்தம், ஏ.வி.தட்சிணாமூர்த்தி வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் வழங்கும் விழாவில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, நடிகர் நாசர் ஆகியோர் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவி மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கி மகிழ்கின்றனர்.

மேலும், இக்கல்வி உதவி வழங்கும் விழாவில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளர் சன்.முனியாண்டி. மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன் எம்.சி., இசட். ஆசாத் எம்.சி.

மண்டல குழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின் எம்.சி., ஸ்ரீராமுலு சொ.வேலு எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் வே.வாசு ஐ.சி. எப்.வ.முரளிதரன் எ.நாகராசன்AC வி.சுதாகர் எம்.சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன் எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி எஸ்.பன்னீர்செல்வம் டி.வி.செம்மொழி பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில்விஜய் பா.ஜெகதீஷ் க.விநோத் ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர் ஆர்.டி.சங்கர்நானா நா.துலுக்காணம் ஜி.தாமோதரன் துரைகண்ணன் சுதாதீனதயாளன் MC ராஜேஸ்வரிஸ்ரீதர், பி.விஜயகுமார் எம். பெரோஸ்கான் எம்.விநாயகம் ஆர்.எஸ்.சித்திக் க.பா.பிரதீப்குமார் ம.அசோக்குமார் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது இரா.வீரமணி அம்பத்தூர் தெற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் நன்றி கூறுகிறார்.

### சி.ஜெ.சீனிவாசன் தலைமையில் ம.கிரண் முன்னிலையில்

# பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. – நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரை!

திருவள்ளூர் ஜூன் 28;-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பில் வெளியகரம் ஊராட்சி - கீழ்கால்பட்டடை பகுதியில் முத்தமிழறிஞர்_டாக்டர்_கலைஞர் அவர்களின் 102 - வது பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு மாபெரும் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் . தலைமையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருத்தணி ம.கிரண் முன்னிலையில். நடைபெற்றது இதில்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ .கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தலைமை கழகப் பேச்சாளர் நெல்லிக்குப்பம்_புகழேந்தி தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான தி.மு.க அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்

இதில் தலைமைக் கழக பேச்சாளர் முரசொலி_மூர்த்தி ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.இரவீந்திரநாத், பள்ளிப்பட்டு பேரூர் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் சி.ஜெ.செந்தில்குமார், பள்ளிப்பட்டு பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.மணிமேகலை, மாவட்ட பிரதிநிதிகள் டி.செங்கய்யா, ஜி.ஆறுமுகம், எம்.குணசேகர், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் எஸ்.கே.சேகர், பேரூர் துணைச் செயலாளர் கவுன்சிலர் டி.விஜியலு, கவுன்சிலர் கபிலா வி.சிரஞ்சீவி, கவுன்சிலர் ஷோபனா ஸ்வப்னா கே.முரளி, புவனா எஸ்.மோகன்ராஜ், கவுன்சிலர் கே.பானு ஜெகதீஷ், கழக சார்பு அணிகளின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் கொல்லலகுப்பம், ஜெ..தண்டபாணி, பி.வெங்கடபெருமாள், பத்மநாபன் (எ) குப்பா ஆர்.முரளி, ஜி.மனோகரன், எஸ்.கமலநாதன், ஈச்சம்பாடி. த.ஜெகதீசன் ஜெ.சுபான், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் உ.சதீஷ் (எ) ஜெகதீஷ் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என்.சந்திரபாபு, ஆர்.ராமன் (எ) பாண்டி தளபதிகுமார், கே.சதாம் உசேன், கே.திவாகர், பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.திருமால், அ.சுதிர், ஆ.மயில்வாசன், ஜே.சூர்யா, கிளைக் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் ஒன்றிய, பேரூர் - அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள்-நிர்வாகிகள், BLA-2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், இளைஞர் அணி பாக முகவர்கள், கழகத் தோழர்கள் மற்றும் பெரும் திரளாக பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் கழக மீனவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் கீழ்கால்பட்டடை ஏ.கே. ரவி, ஒன்றிய துணை செயலாளர் கே.ஆஞ்சிநேயன் ஆகியோர் நன்றி உரை ஆற்றினர்.